புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

===

‘காலநகர்வும், பண்பாட்டு விடுதலையும்’
ஜாய்ஞானதாசனின் ‘மங்களாவடி கதைகளை’ முன்வைத்து

முனைவர் செ. செல்வகுமார்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165, குமரி மாவட்டம்.

===

முன்னுரை

‘ஒரு மறக்கப்பட்ட வரலாறு’ என்ற நூலின் வாயிலாக அறியப்பட்ட திருமதி. ஜாய் ஞானதாசன் நாகர்கோயில் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியை உருவாக்கி அதன் தொடக்க முதல்வராகப் பணியாற்றியவர். 1998-ல் இந்தியக் கல்விக்கழகம் வெளியிட்ட இந்நூல் அவருக்கு அடையாளம் தந்தது. 2001 ஏப்ரல் 10-ஆம் நாள் பெண்கள் கல்வி மேம்பாட்டு மையத்தால் வெளியிடப்பட்ட அவரது நூல் ‘மங்களாவடி கதைகள்’ ஆகும். இது தன்வரலாற்று நூலாகக் கருதப்பட்டாலும் ‘கதை’ என்று குறிப்பிடப்பட்டதைப் போலவே புதினத்தின் தன்மையைக் கொண்டும் விளங்குகிறது. இதற்கு முன்னோடியாக 1965-ஆம் ஆண்டு வி.டி. சகாயம் என்பவரால் எழுதப்பட்ட ‘கைவிடாத கடவுள்’ என்ற நூலைச் சொல்லலாம்.

கிறித்தவ மதப்போதகரான வி.டி. சகாயம் தனது நூலில் சிறுவயதில் பிராமணர், நாயர் சமூகத்தவரால் பள்ளிக்கூடத்தில் தரையில் அமர்த்தப்பட்டுப் படித்ததைக் கவலையோடு பதிவு செய்திருக்கிறார். அவரது தந்தை அந்தப் பள்ளியில் ஆசிரியராக இருந்து வகுப்பறையில் கற்பித்த போதும் மகன் தரையில் அமர்ந்து தான் கல்வி கற்க முடியும் என்றொரு காலம் இன்றைய குமரிப்பகுதியில் இருந்தது. ‘மங்களாவடிக் கதைகளி’லும் இதுபோன்ற தன் வரலாற்றுடனான சமூக வரலாற்று சம்பவங்களைக் காணமுடியும்.

இவ்விரண்டு தன்வரலாற்று நூற்களின் நடுவில் 1998 செப்டம்பரில் ஈத்தாமொழி இந்து நாடார் வகுப்பைச் சேர்ந்த அழகிய நாயகி அம்மாள் ‘கவலை’ என்ற தன் வரலாற்று நூலை எழுதினார். இதனைப் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டுப்புறவியல் மையம் வெளியிட்டது. இந்நூல் அவர்கள் எழுதிய ஒரே நூல் என்பதும், இதை எழுதும் போது அவர்களின் வயது 61 என்பதும் குறிப்பிடத்தக்கது. மங்களாவடிகதைகள் எழுதும் போது ஜாய் ஞானதாசனுக்கு 81 வயது.

மங்களாவடியின் வரைபடம்

மங்களாவடியின் நிலஎல்லை இன்றைய கலெக்டர் அலுவலகத்தில் இருந்து திருவனந்தபுரம் – நாகர்கோயில் ரோடு போகும் அந்த இடம் என்கிறார். அதுபோல கல்லுகோயில் முதல் வெட்டூர்ணிமடம் போகிற பகுதிவரை விரிந்திருந்ததாகவும், முதலில் ‘மங்களாத் தெரு’ என்று அழைக்கப்பட்டுப் பிறகு ‘மங்களாவடி’யாக மாறியது என்கிறார்.

‘மங்களா’ என்ற பதம் நாகர்கோயில் மற்றும் நெய்யூர் போன்ற இடங்களில் வெள்ளைக்கார மிஷனெரிகளின் நிழலில் வளர்ந்த சில குடும்பங்களை, தெருக்களை நினைவூட்டுவதாக அமையும். வங்காள மொழிச் சொல்லான ‘பங்களா’ மருவி மங்களா ஆனது. அதை இந்தியச்சொல் என்பதையும் மறந்து ஆங்கிலச் சொல்லாகக் கருதும் அறியாமையைக் குறிப்பிடுகிறார்.

இதற்குக் காரணம் வெள்ளையர்கள் தங்கள் மேட்டிமைக்கு அடையாளமாக இச்சொல்லைக் கருதினார்கள். மங்களாவடியிலுள்ள கிறித்தவர்கள் தங்களை சாதாரண

கிறித்தவர்களிலிருந்தும் ஒருபடி உயர்ந்தவர்களாகக் கருதினர். ஞாய் ஞானதாசன் இந்த மேட்டிமைத்தனத்தைக் கட்டுடைக்கிறார். மங்களாவடிப் பெண்கள் வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே குளிப்பார்கள் என்றும், அவர்கள் செய்யும் இட்லியை எடுத்து எறிந்தால் காக்கை செத்துவிழும் என்றும் கேலி செய்கிறார்.

*மங்களாவடி × புன்னைக்காடு*

கிறித்தவ மிஷனெறிகளின் உதவியால் மங்களாவடியிலுள்ள பலர் கொழும்பு, மூணாறு, நீலகிரி, வால்பாறை பகுதிகளுக்குப் போய் டீ எஸ்டேட்களில் வேலை செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். நாகர்கோயிலைச் சுற்றிய பகுதிகளில், மலைகளில் நிலம் வாங்கிப் போட்டு தேக்கு, கிராம்பு பயிரிட்டு 'கண்டாக்கு' என்று பெயரெடுக்கிறார்கள்.

மங்களாவடியில் வேலை செய்ய வருகிறவர்கள் புன்னைக்காட்டுக்காரர்கள். ஏழைப்பெண்கள் தையல் தைத்து மங்களாவடியில் கொண்டு வந்து கொடுத்து சம்பளம் பெறுகிறார்கள். அன்றைய திருவிதாங்கூரில் மேலாடை அணிய மறுக்கப்பட்ட பெண்களுக்கு ஆடை தயாரிக்க உருவான தையல் நிலையங்கள் அடுத்த கட்டமாக ஆங்கிலேயருக்கு மேஜை விரிப்பில் அலங்காரப் பூக்கள் தைக்கும் தையல் வேலையாக மாறுகிறது.

இது தவிர புன்னைக் காட்டிலுள்ள பெண்கள் மங்களாவடியிலுள்ள வீடுகளில் வந்து நெல் அவித்து குத்துகிறார்கள். வீட்டு வேலைகளும் செய்கிறார்கள். மங்களாவடிக்கு மேற்குப்பக்கம் வெட்டாந்தரையான பகுதியில் புன்னைக் காட்டுக்காரர்கள் வசிக்கிறார்கள்.

ஐசக் அருமைராசன் என்ற எழுத்தாளர் தனது நாவல்களின் கதைக்களமாக இந்தப் புன்னைக்காடு பகுதியைத்தான் அதிகமும் எடுத்தாள்கிறார்.

*வீடுகள், மக்கள்*

மங்களாவடியிலுள்ள கண்டாக்குகள் ஞாயிறுதோறும் வெள்ளைக்காரர்களைப் போல கோட்டு மாட்டிக்கொண்டு கோயிலுக்குச் செல்கிறார்கள். எட்டரை ஒன்பது மணிக்கு கோயில் முடிந்ததும் வீட்டுக்கு வந்து கோழி இறைச்சி சாப்பிடுகிறார்கள்.

மங்களாவடியிலுள்ளவர்கள் எவ்வளவு பணக்காரர்களாக வாழ்ந்த போதிலும் சமூக அரசியலின் பொதுவிதிக்குக் கட்டுப்பட்டுதான் வாழ்ந்தார்கள். அக்காலத்தில் கிறித்தவர்கள் ஓடுபோட்ட வீட்டில் வாழக்கூடாது என்பது அரசாங்க சட்டம். எனவே வீடுகள் ஓலைக்கூரைகளால் அமைக்கப்பட்டன. செங்கல் கூட இல்லாமல் வெறும் மண்ணினால் வீடு கட்டிய தகவலை அம்மையார் கூறுகிறார். இப்போது மாடரேட்டர் ஞானதாசன் பாலிடெக்னிக் இருக்கும் இடத்தில் அன்று ஒரு டிஸ்லேரி இருந்ததாம். வெள்ளைக்காரர்கள் கருப்புகட்டி செய்யக் கட்டின அதில் வரும் கோடைத் தண்ணீரைப் பீப்பாயில் கொண்டு வந்து வெறும் மண்ணைக் குழைத்து வீடு கட்டுவார்களாம். ஜாய்ஞானதாசனின் தகப்பனார் அவ்வாறு கட்டிய மூன்று வீடுகள் இப்போதும் பலமாக உள்ளதாம். மங்களாவடியில் 'ஓட்டடுக்கு பாக்கியம்' என்றொரு பெண்மணி. அவர் தனது வீட்டுக்கு ஓட்டுக்கூரை போடவே, தாசில்தார் ஆளனுப்பி ஓட்டையெல்லாம் கழற்றியெடுத்தார். பாக்கியம் விடவில்லை. விக்டோரியா ராணிக்குக் கடிதம் எழுதி ஓடுபோட்ட வீட்டில் வாழ கிறித்தவர்களுக்கும் உரிமை உண்டு என்று வாதாடி போராடி கிறித்தவர்களுக்கு ஆதரவாக ஒரு அரசாங்க சட்டத்தையே உருவாக வைத்தார்.

*ஒப்பீடு*

காலமாற்றத்தினால் ஏற்பட்ட முன்னேற்றத்தில் உயர்வடைந்த மங்களாவடிக்கதை மாந்தர்களுடன் அழகிய நாயகி அம்மாளின் 'கவலை'யிலுள்ள மாந்தர்களைப் பொருத்திப் பார்க்கும் போது மிகப்பெரிய வேறுபாடுகள் தெரிகின்றன. தங்களைப் புராணக் கதைகளுடனும், அரசவம்சத்துடனும் தொடர்புபடுத்திய அழகியநாயகி அம்மாளின் மேட்டிமைப்புனைவை மங்களாவடிக்கதையில் காணமுடியாது. இதிலுள்ளள மாந்தர்கள் தங்களுக்குள் வேறுபாடு கொண்டிருந்தாலும் போராடி முன்னுக்கு வந்தார்கள் என்பதே பிரதி முழுக்கவும் எதிரொலிக்கிறது.ஜாய் ஞானதாசனைத் தமிழில் பாமாவுடன் ஒப்பீடு செய்யலாம். 'கருக்கு' தன்வரலாற்றில் மாட்டுக்கறி சாப்பிடுவது இழிவு என்ற நிலையை மீறி பாமா பேசுவது போலவே இவரும் 'எனக்கு எல்லா இறைச்சியை விட மாட்டு இறைச்சிதான் ரொம்ப இஷ்டம்' என்கிறார். சாராள்டக்கர் கல்லூரியில் வேலைக்கு விண்ணப்பிக்கும் போது கொண்டைபோட்டு தலைமுடிக்க

*வேண்டும், காலை ஜெபத்திற்கு கட்டாயம் வரவேண்டும் என்றெல்லாம் நிபந்தனை விதிக்கிறார்கள். அம்மையார் அவற்றை மீறிப் பேசுகிறார். அன்றைய வெள்ளைக்கார பிரின்சிபல் சாப்பாட்டு மேசையில் இருந்து கொண்டு அம்மையாரிடம் அகங்காரமாகப் பேசுகிறார். ஜாய்ஞானதாசன் அவருக்குச் சளைக்காமல் பதில் சொல்கிறார். காலம் மாறுகிறது. அதே பங்களாவில் அம்மையார் தங்கி அதே மேசையில் அமர்ந்து சாப்பிடும் நிலைக்கு உயர்கிறார்.*

*1973 ஜுலை 6-ஆம் தேதி ஜாய் ஞானதாசனின் கணவர் இறக்கிறார். 7-ஆம் தேதி அடக்கம் செய்யப்படுகிறார். 8-ஆம் தேதி அம்மையார் தனது மகளுடன் கோயிலுக்குச் செல்கிறார். விதவை என்று முக்காடு அணிந்து மூலையில் கிடக்காமல் அடுத்தநாள் கல்லூரிக்கும் செல்கிறார். ஒரு பெண் என்ற முறையில் சமூகம் விதித்த கட்டுப்பாடுகளைத் தகர்த்து சுயேட்சையுடன் தனது இயக்கத்தைத் தானே தீர்மானிக்கும் இந்த அசைவுதான் பாமாவுடன் இவரையும் இணைய வைக்கிறது.*

பெண்கல்வி

*குமரியில் சீர்திருத்த கிறித்தவம் காலூன்றிய 1806-ஆம் ஆண்டு வரலாற்று சிறப்புமிக்கது. றிங்கல் தௌபே என்ற மிஷனெரி 1808-ஆம் ஆண்டு கல்வி நிலையம் உருவாக்கினார். திருவிதாங்கூரில் அனைவரும் ஒன்றாகப் படிக்கும் முதல் கல்வி நிறுவனம் மயிலாடியில் உதயமானது. "கடந்த 200 வருடங்களில் எங்கள் சமுதாயத்திலுள்ள பெண்கள் வாழ்க்கையில் நடந்திருக்கிற மாற்றம், ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் என் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கிறது. அன்று ஆரம்பித்த பெண்கல்விதான் இன்று என்னை இந்த அளவுக்கு உருவாக்கியது" என்று கூறும் அம்மையார் வயதுக்கு வந்ததும் திருமணம் செய்து கொடுக்கும் அன்றைய நடைமுறையை மீறி கற்கிறார். துணிச்சல் மிகுந்த பெண்மணியாக டாக்டர் மு.வ., காமராசர் ஆகியோரை நேரில் சந்தித்து பெண்களுக்கான முதல் கல்லூரியை நாகர்கோயிலில் நிறுவுகிறார்.*

*தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்று வகுப்பறையில் ஒதுக்கப்பட்ட பாமா வகுப்பில் முதல் மாணவியாகப் படித்ததால் சமூகம் தன்மேல் சுமத்திய அசுத்தங்களை எல்லாம் களைந்து நிமிர்ந்தெழுந்ததாகக் 'கருக்கு' நூலில் குறிப்பிடுகிறார். இருவேறு சூழ்நிலைகளில் இருவேறு வகையான ஒடுக்குமுறைகளில் இருவேறு பெண்கள் தங்களை விடுவித்துக் கொள்ளும் சக்தியாகப் பெண்கல்வி விளங்குவதைக் காணலாம். ஆனால் அழகியநாயகி அம்மாளின் 'கவலை'யில் மேல்நிலையாக்கப் பின்னணியில் இந்த வாய்ப்பு பெண்ணுக்கு மறுக்கப்படுவதும், அதை மீறி எழும் வாய்ப்பு இல்லாமற் போவதும் குறிப்பிடத்தக்கது.*

*முடிவுரை*

*காலத்தின் நகர்வில் ஏதோவொரு வகையில் பண்பாட்டு விடுதலை சமூகத்தில் நிலவுகிறது என்பதை சீர்திருத்தக் கிறித்தவத்தின் வருகைக்குப் பிறகு குமரியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து உணரலாம். அடிமைப்பட்டுக்கிடந்த மக்களின் எழுச்சிக்கு அந்தக் காலநகர்வு எங்ஙனம் உந்துதலாக இருந்தது என்பதை 'மங்களாவடிக்கதைகள்' இயம்புகிறன்றன.*

*குமரி மாவட்டத்தின் புனைகதைப் பிரதிகளில் இந்தக் காலநகர்வை எதிர்த்த 'ஒரு புளியமரத்தின் கதை' நாவல் தாமோதரன் ஆசான் பாத்திரம் வாயிலாக மகாராஜாக்களின் பெருமையையும், தோட்டிச்சிகள் ஜெம்பரும், ரவுக்கையும் கேட்காத காலம் என்றும், தற்காலம் சொக்கனும் சுடலையும் ஆட்சி செய்ய புறப்பட்ட காலம் (ப. 107) என காலத்தைப் பின்னகர்த்தும் போது பெண்ணொருத்தி எழுதிய தன்வரலாறு அதனை மறுத்து தங்கள் பண்பாட்டு விடுதலையை எங்கிருந்து பெற்றோம் என்று பேசும் இந்தப் பிரதி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.*

துணைநூற்பட்டியல்


1. *அழகியநாயகி அம்மாள், கவலை, நாட்டுப்புறவியல் துறை, தூயசவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002, முதற்பதிப்பு, செப். 1998.*
2. *ஜாய் ஞானதாசன், மங்களாவடிக்கதைகள், பெண்கள் கல்வி மேம்பாட்டு மையம், 1792, ஐ பிளாக் 5-வது தெரு, 18-வது பிரதான சாலை, சென்னை – 600 040, முதற்பதிப்பு, ஏப். 2001.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********